
aanmeegamalar.com
e-magazine
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!
மெயில் புக்
aanmeegamalar.com
அருள்மிகு பர்வதவர்த்தினி அம்மன்
அருள்மிகு ராமநாதசுவாமிகள்
2025
தீபாவளி
சிறப்பிதழ்
1


KRT
K.R THANGA MAALIGAI
GOLD • DIAMOND • PLATINUM • SILVER
இனிய
தீபாவளி
நல்வாழ்த்துக்கள்
K.R.தங்கமாளிகை
மகிழ்ச்சியான தருணங்களுக்கு உங்கள் KRT
98, சாலை தெரு, இராமநாதபுரம்–623501.
Ph: 8825657248, 9159600007 | www.krtjewellry.com
krthangamaligai | krthangamaaligai | K R Thanga Maaligai

# சங்கடாங்கள் தீர்க்கும் இராமநாதபுரம் உச்சிஷ்ட மகாகணபதி

இராமநாதபுரம் வெளிப்பட்டணத் தில் எழுந்தருளி அருள் பாலிக்கும் அருள்மிகு ஸ்ரீ தர்ம தாவள விநாயக ரின் வடிவம் உச்சிஷ்ட மகா கணபதி யின் வடிவமாகும்.

உச்சிஷ்ட கணபதி என்பவர் விநாயகரின் தாந்த்ரீக வடிவமாகும், இதில் அவர் தன் மனைவி நீலவாணியை இடதுமடியில் அமர்த்தி, அவரது துதிக்கை நீலவாணியின் வயிற்றுப் பகுதியில் படியுமாறு காட்சியளிப்பார். இவர் குறிப்பாக தந்திர வழிபாட்டில் சிறப்பிக்கப்படுகிறார் மற்றும் திருமணத் தடைகளை நீக்குதல், தம்பதியரிடையே ஒற்றுமையை ஏற் படுத்துதல் போன்ற நன்மைகளைத் தருவார்.

தமிழ்நாட்டில் திருநெல்வேலியில் தாமிரபரணி ஆற் றங்கரையில் இவருக்கு உச்சிஷ்ட கணபதி கோயில் அமைந்துள்ளது, இது ஆசியாவிலேயே மிகப்பெரிய உச்சிஷ்ட கணபதி கோயில். அடுத்தபடியாக இராமநாத புரம் வெளிப்பட்டணம் பகுதியில் உச்சிஷ்ட கணபதி ஸ்ரீ தர்ம தாவள விநாயகர் என்ற பெயரோடு ஆலயம் கொண்டுள்ளார்.

இவர் தன் இடது தொடையில் மனைவி நீலவாணியை அமர்த்தி, துதிக்கை நீலவாணியின் வயிற்றுப் பகுதியில் இருக்கும்படியான அபூர்வமான கோலத்தில் காட்சி தருவார். இவர் தாந்த்ரீக வழிபாட்டிலும், வாமாச்சர சடங்குகளாலும் வணங்கப்படுகிறார்.

### மந்திர ரகசியங்கள்


உச்சிஷ்ட கணபதி வழிபாடு, குறிப்பாக மந்திரங்களின் மூலம், ஆன்மீக மற்றும் பொருள் வரங்களைத் தருவதா கவும் கூறப்படுகிறது.

### திருமண பரிகாரம்

இவர் நவகிரகங்களை குறிக்கும் விதமாக தனது பீடத்தில் நவ யந்திரங்கள் பிரதிஷ்டை செய்து நவகிரக தோஷங்களை நீக்கி, திருமணத் தடைகளைப் போக்கி விரைவில் திருமண யோகம் கிடைத்திடவும் தம்பதியர் ஒற்றுமையுடன் இல்லறம் நடத்திடவும், குழந்தை பாக்கியம் பெற்றிடவும் அருள்புரிகிறார்.

இவர் ஆன்மீக மற்றும் பொருள் வரங்களை அளிப்ப தாகவும், தனித்துவமான மந்திர சாதனங்களின் மூலம் பக்தர்களுக்கு அதிகாரம் அளிப்பதாக நம்பப்படுகிறது.

மூலவர் சன்னதி, அர்த்த மண்டபம், மகா மண்டபம் முதலியன கருங்கற்களால் கட்டப்பட்ட நமது இராமநாத புரம் அருள்மிகு ஸ்ரீ தர்ம தாவள விநாயகர் ஆலயம் விளங்குகிறது. இங்கு விநாயகரும் அருள்தரும் அன்னை ஸ்ரீ முத்தால பரமேஸ்வரி அம்பாளும் இரண்டு



தெய்வங்களையும் ஒரே இடத்தில் வணங்கி சிறப்பான வாழ்வை பெற்றிட நல்வாய்ப்பாகும்.

இராகுவுக்கு உரிய தெய்வமாக அம்பாளும் கேது வுக்கு உரிய தெய்வமாக விநாயகரும் இருப்பதால் ராகு கேது பரிகார பிரார்த்தனை ஸ்தலமாகவும் இது விளங்குகிறது.

ஒரே இடத்தில் விநாயகரையும் அம்பாளையும் வழி படுவது மிகுந்த நற்பலன்களைக் கொடுக்கும் என்பதில் எந்தவித சந்தேகமுமில்லை.

அருள்மிகு ஸ்ரீ தர்ம தாவள விநாயகர் என்கிற உச்சிஷ்ட மகா கணபதியின் அருளையும் அருள்தரும் அன்னை ஸ்ரீ முத்தால பரமேஸ்வரி அம்பாளின் திருவருளையும் பெற்றிட ஒருமுறை வருகை தந்து பாருங்களேன் இராமநாதபுரம் வெளிப்பட்டணத்திற்கு..

– பூ. பாலாஜி இராமநாதபுரம்

# ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள புண்ணிய ஸ்தலங்கள்

இராம நாதபுரத்தில் இருந்து குறைந்தபட்சம் 13 கிலோமீட்டர் தொலைவிலும் அதிகபட்சம் 50 கிலோ மீட்டர் தொலைவில் அற்புதங் கள் புரியும் ஆலயங்கள் அதன் விபரங்கள் பின்வருமாறு..

1.இராமேஸ்வரம் அருள்மிகு ஸ்ரீ இராமநாதசுவாமி திருக்கோயில் 2.தனுஷ்கோடி கோதண்ட ராமர் ஆலயம் 3. உலகில் முதல் சிவாலயம் என்று அழைக்கப்படுகின்ற திரு உத்தரகோசமங்கை மங்கள நாத சுவாமி திருக்கோவில் 4.திருப்புல் லாணி ஸ்ரீ ஆதி ஜெகநாதப்பெருமாள் திருக்கோவில் 5.சேதுக்கரை 6.தேவிபட்டினம் நவபாஷாண நவக்கிரக கடற்கரை கோவில் 7. உப்பூர் வெயில் உகந்த விநாயகர் திருக்கோவில் 8.பெருவயல் அருள்மிகு ரெணபலி முருகன் திருக்கோவில் 9. நயினார் கோவில் அருள்மிகு ஸ்ரீ நாகநாத சுவாமி திருக்கோவில்

10.திருவெற்றியூர் அருள் மிகு ஸ்ரீ பாகம் பிரியாள் திருக் கோவில் 11.திருவாடானை ஆதி ரெத்தினேஸ்வரர் திருக் கோவில் 12. இராமநாதபுரம், பரமக்குடி அன்னை ஸ்ரீ முத்தாலம் மன் கோவில்.

# ஸ்ரீராமர் பாதம் பட்ட திருத்தலங்கள்

ராமநாதபுரம் மாவட்டத்தில் பழமை வாய்ந்த பெருமாள் திருத்தலங்கள் வெளியில் தெரியாத ஏராளமான ஆலயங்கள் அமைந்துள்ளன. அவற்றில் நாம் அறிந்தவரை உள்ள ஆலயங்கள் பற்றியும் வழித்தடம் விபரம்

- திருப்புல்லாணி ஆதி ஜெகநாதப் பெருமாள் திருக்கோயில் 108 திவ்ய தேசங்களில் 44–வது திவ்யதேசம் வைணவர்களின் புனிதமாகவும் புண்ணியம் வாய்ந்த்தாகவும் போற்றப்படும் பெருமை மிக்க ஆலயம் ராமாவதாரத்தில் விபீஷணன் சரணா கதி சேது பந்தனம்ராமலிங்க பிரதி ஷ்டை என முப்பெருமையுடைய தலம் இராமநாதபுரத்திலிருந்து 13 கி.மீ
- சேதுக்கரை சீனிவாச பெருமாள் மிகவும் பழமை வாய்ந்த ஆலயம். வெள்ளை பளிங்கு கல்லாலான பெருமாளின் திருமேனி பார்க்க பார்க்க அழகு திருப்பணி நடைபெற்று தினசரி பூஜைகள் நடைபெற பெருமாளின் அருள் வேண்டி பிரார்த்தனை செய் வோம்.
- இராமேஸ்வரம் சேது மாதவ பெருமாள் பாரத தேசத்தில் புண்ணியம் மிக்க நான்கு மாதவ தலங்களில் தெற்கே அமைந்துள்ள ஒரே தலம் சேது மாதவம் இராமேஸ்வரம் அருள்மிகு ஸ்ரீஇராமநாத சுவாமி ஆலயத்தில் உள்ளே அமைந்துள்ள தனிச் சன்னதியில் அருள்புரிகிறார்.
- கொத்தங்குளம் சுந்தரராஜப்பெருமாள் திருக்கோயில் வைணவர்களின் மிகவும் முக்கியமான ஆச்சாரியரான மணவாள மாமுனிகள் அவதார தலம் அவரது தாயார் பிறந்து வாழ்ந்த ஊர் அழகிய திருக்கோயில் இராமநாதபுரம் மாவட்டம் சிக்கலில் இருந்து 3 கி.மீ
- தேவிபட்டினம் கடலடைத்த பெருமாள் ராமாவதாரத்தில் ராமச்சந்திர மூர்த்தி தேவிபட்டினத்தில் கடலில் நவ கிரகங்களை பிரதிட்டை செய்து வழிபட கடல் அலையை நிறுத்தியதால் இந்த பெருமாள் கடலடைத்த ஆதி ஜெகநாதன் என்று வழிபடப்படுகிறார் அழகியதொரு ஆலயம்
- சக்கரவாள நல்லூர் ஆதி கேசவப் பெருமாள் திருக் கோயில் பெருந்தேவி தாயார் என்ற ஒரே பத்தினியுடன் பெருமாள் ஆஜானு பாகுவாக நின்ற கோலத்தில் வரத முத்திரையுடன் மிகுந்த வரப்பிரசாதியாக அருள்பாலிக்கிறார் இராமநாதபுரத்திலிருந்து 10 கி.மீ
- குளத்தூர் சுந்தரராஜப்பெருமாள் திருக்கோயில் பூமி நீளா சமேத சுந்தரராஜப்பெருமாள் அமர்ந்த கோலத்தில் அருள்பாலிக்கும் அழகிய ஆலயம் இராமநாதபுரத்தில் இருந்து 10 கி.மீ
- ஆதங்கெத்தங்குடி சீனிவாசப் பெருமாள் ஸ்ரீ தேவி பூமி தேவி சமேத சீனிவாசப் பெருமாள் நின்ற திருக்கோலத்தில் அருள் புரிகின்ற ஆலயம் இராமநாதபுரம் மாவட்டம் தேரிருவேலி அருகில் அமைந்துள்ளது.
- மாரந்தை பூவராக பெருமாள் மடியில் பூமா தேவியை அமர்த்திய திருக் கோலத்தில் வராக பெருமாள் எழுந்தருளி அருள்பாலிக்கும்பழமை வாய்ந்த ஆலயம் இராமநாதபுரம் மாவட்டம் கடலாடி அருகே அமைந்துள்ளது.
- தொண்டி உந்தி பூத்த பெருமாள் கோயில் பெருமாள் தனது இரண்டு தேவிமார்கள் சகிதமாக நின்ற கோலத்துடன் அருள்பாலிக்கிறார் .
- முகிழ்த்தகம் சொர்ண வருஷம் பெய்த பெருமாள் கோயில் பெருமாள் இரு தேவியர்கள் சகிதமாக அருள்புரிகிறார் தொண்டி அருகே அமைந் துள்ளது ஆலயம்
- கதைக்குளம் பெருமாள் கோயில் உத்தரகோசமங்கை அருகில்
- கோடனூர் கரிய மாணிக்கப் பெருமாள் கோயில் இராஜ சிங்க மங்கலம்
- கள்ளவழியேந்தல் பிருந்தாவனநாத பெருமாள் கோயில் திருவாடானை அருகே அமைந்துள்ளது
- கட்ட விளாகம் வரதராஜப் பெருமாள் கோயில் தொண்டி அருகே அமைந்துள்ளது
- பரமக்குடி அருள்மிகு ஸ்ரீ சுந்தரராஜப்பெருமாள் திருக்கோயில்
- எமனேஸ்வரம் அருள்மிகு ஸ்ரீ வரதராஜப் பெருமாள் திருக்கோயில்
- இராமநாதபுரம் அருள்மிகு ஸ்ரீ கோதண்டராம சுவாமி கோயில்
- தங்கச்சி மடம் அருள்மிகு ஸ்ரீ ஏகாந்தராமர் கோயில்
- தனுஷ்கோடி அருள்மிகு ஸ்ரீ கோதண்டராமர் கோயில்
- கள்ளிக்குடி பெருமாள் கோயில் தேவிபட்டினம் அருகில் உள்ள ஸ்ரீ தேவி பூமி தேவி சமேத பெருமாள் பழமை வாய்ந்த அர்ச்சா மூர்த்தி. இன்னும் பல ஆலயங்கள் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ளது.

Dr. S. தன்வந்திரி கார்த்திக்வேல்
தன்வந்திரி ஆயுர்வேத வைத்தியசாலை
அரசு பதிவு பெற்ற மருத்துவமனை
HOSPITAL Regn. No. : MADUAYU2021002827O ◆ ISO 9001 : 2015 CERTIFIED HOSPITAL
இங்கு தங்கி சிறப்பு சிகிச்சை பெறுபவர்களுக்கு மருத்துவ காப்பீடு வசதி உண்டு
41/130-A, பாலாஜி தெரு, அழகப்பன் நகர், மதுரை 625 003.
Email: drkarthic@gmail.com web: www.drkdhanvanthriclinic.com
Ph: 0452-2692647 mobile: 87604 44404, 73731 166111, 80980 01791

மதுரை தெப்பக்குளம்:
அனுக்கிரஹா இல்லம், கண்ணன் டிபார்ட்மெண்ட்ல் ஸ்டோர் எதிர்புறம்,
அன்னை சந்திரமதி கல்யாண மஹால் அருகில், பங்கஜம் காலனி,
தெப்பக்குளம், மதுரை - 625 009 அலைபேசி: 93601 32500

சென்னை:
16/25, சந்தானகிருஷ்ணன் தெரு, நேரு நகர், அஸ்தினாபுரம் ரோடு,
MIT front கேட் அருகில், குரோம்பேட்டை, சென்னை - 600 044 அலைபேசி: 75024 99666

இராமநாதபுரம் கிளை:
NO 9, RR சேதுபதி நகர். காவல் நிலையம் பின்புறம். இராமநாதபுரம்.
அலைபேசி: 9944167183. 9360132498



தலைமை மருத்துவர் :
Dr. S. தன்வந்திரி கார்த்திக்வேல்
B.A.M.S., MD., FICA., PG Geriatrics

உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்

விருப்ப சந்தா செலுத்த ஸ்கேன் செய்யவும்

aanmeegamalar.com

e-magazine

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! மெயில் புக்

படியுங்கள்...
aanmeegamalar.com
இதுவரை வெளிவந்த
185 e-book
கட்டணமின்றி டவுன்லோடு செய்து படிக்கலாம்

# இராமேஸ்வர தீர்த்தமும் மகிமையும்

இந்தியாவின் மிகமுக்கியமான புன்னியஸ் தலமாக ராமேசுவரம் உள்ளது. மனிதஅவதாரம் எடுத்து அயோத்தியில் பிறந்து காடுகளில் வாழ்ந்து மனைவியை பிரிந்து வானரபடை களுடன் ராமேசுவரம் தீவில் பாலம் அமைத்து இலங்கை சென்று போரிட்டு ராவணனை வென்று போரில் ஏற்பட்ட தோஷத்தை போக்க ராமன் தன் கரங்களால் மனைவிசீதாதேவியுடன் சிவ பூஜைசெய்த இடம் ராமேசுவரம் ஆகும்.

இங்கு உள்ள தீர்த்தம் மகிமைகள் அறிவோம்.

### 1. மகாலெட்சுமிதீர்த்தம்

இது கிழக்கு கோவிலின் பிரதான வாசலில் அனுமார் சன்னதிக்கு எதிரில் தெற்கு பக்கத்தில் உள்ளது. இதில் ஸனானம் செய்தால் சகல ஐஸ்வர்யமும் பெறலாம்.

### 2. சாவித்திரி தீர்த்தம், 3. காயத்ரி தீர்த்தம், 4. சரஸ்வதி தீர்த்தம்

அனுமார் கோவிலுக்கு மேல்புறம் உள்ளது. இம்மூன்று தீர்த்தங்களில் ஸ்நானம் செய்தால் மத சடங்குகளை விட்டவர், சந்ததியில்லாதவர் இஷ்டசித்தி அடையலாம்.

### 5. சேது மாதவ தீர்த்தம்

இது மூன்றாம் பிரகாரத்தின் மேற்கு பகுதியில் உள்ள தெப்பக்குளம். இதில் ஸ்ரீராம பிரானால் சகல லெட்சுமி காடாட்சமும்,சித்த சக்தியும் பெறலாம்.

### 6. நள தீர்த்தம்

மூன்றாம் பிரகாரம் மேற்கு பகுதியில் உள்ள சேது மாதவர் சன்னதிக்கு தென்புறம் உள்ளது. இதில் நீராடுவதால் கடவுளின் அனுக்கிரகம் பெற்று, சொர்க்கலோக பதவி அடைவர்.

### 7. நீல தீர்த்தம்

மூன்றாம் பிரகாரம் மேற்கு பகுதியில் உள்ள சேது மாதவர் சன்னதிக்கு வடபுறம் உள்ளது. இதில் நீராடுவதால் சமஸ்தயாக பலனையும் அடைந்து சொர்க்கலோக பதவி அடைவர்.

### 8. கவாய தீர்த்தம்

இது மூன்றாம் பிரகாரம் சேது மாதவர் சன்னதியின் முன்புறம் உள்ளது. இதில் நீராடுவதால் தேக ஆரோக்கியம் கிடைக்கும்.



### 9. கவாட்ச தீர்த்தம்

இது மூன்றாம் பிரகாரம் சேது மாதவர் சன்னதியின் முன்புறம் கவாய தீர்த்தத்திற்கு அருகில் உள்ளது. இதில் நீராடுவதால் நரகத்திற்கு செல்ல மாட்டார்கள். மன வலிமை, தேக ஆரோக்கியம், திட சரீரம் கிடைக்கும்.

### 10. கந்நமாதன தீர்த்தம்

சேது மாதவர் சன்னதியின் முன்பகுதியில் கவாய், கவாட்ச தீர்த்தங்களுக்கு அருகில் உள்ளது. இதில் நீராடுவதால் மகாதரித்திரம் நீங்கி ஐஸ்வர்ய சித்தியும் பெற்று பிரம்ம ஹத்தியாதிபாப நிவர்த்தி பெறுவர்.

### 11. சங்கு தீர்த்தம்

பிரதான வாசல் உட்புறம் தெற்கு பக்கத்தில் இரண்டாம் பிரகாரத்தில் இதில் நீராடுவதால் செய்நன்றி மறந்த சாபம் நீங்கப் பெறும்.

### 12. சக்கர தீர்த்தம்

இராமநாதசுவாமி கோவில் பிரதான வாசல் உட்புறம் உள்ள இரண்டாம் பிரகாரத்தின் வடபுறம் உள்ள கருவூலத்தின் கீழ்புறம் உள்ளது. இதில் நீராடுவதால் ஊனம், குருடு, செவிடு ஆகியவை நீங்கி சௌக்கியம் அடைவர்.

– தொடர்ச்சி 4ம் பக்கம்...

ஸ்ரீ நாச்சாயி அம்மன் துணை, ஸ்ரீ தர்ம சாஸ்தா துணை

வாசுதேவன் பாத்திரக்கடை

முகவையின் மபெரும் பாத்திரக்கடை

வாசுதேவா என்றால் வளம் பொங்கும்! வாசுதேவன் பாத்திரத்தில் ராசி பொங்கும்!!



இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்!



கல்யாண சீர்வரிசைக்கு தேவையான பாத்திரங்கள், கிரைண்டர், மிக்ஸி, குக்கர், கேஸ் ஸ்டவ் மற்றும் அனைத்தும் வாங்க கைராசியான நிறுவனம்

12,பி.கே.சாமி தெரு, இராமநாதபுரம் போன்: 04567220 209, செல்: 88074 08807

3ம் பக்கத் தொடர்ச்சி...

**13. பிரம்மாத்திர விமோசன தீர்த்தம்**

இது இரண்டாம் பிரகாரம் வடக்குபக் கத்தில் பைரவர் சன்னதி அருகில் உள்ளது. இதில் நீராடுவதால் பிரம்மஹத் தயாதிதோஷங்களும், பாவங்களும் நிவர்த்தியாவதுடன், பில்லி சூனியமும் நீங்கும்.

**14. சூர்ய தீர்த்தம்**

இது இரண்டாம் பிரகாரத்தில் உள்ள கருவூலத்தில் மேற்கு பக்கம் அமைந் துள்ளது. இத்தீர்த்தத்தில் நீராடுவ தால் திரிகாலஞானமும் உண்டாவதுடன் ரோகங்கள் நிவர்த்தியாகும்.

**15. சந்திர தீர்த்தம்**

இது இரண்டாம் பிரகாரத்தில் உள்ள கருவூலத்தின் மேற்கு பக்கம் உள்ளது. இதில் நீராடுவதால் ரோக நிவர்த்தி அகலும்.

**16. கங்கா தீர்த்தம் 17. யமுனா தீர்த்தம் 18. காயத்ரி தீர்த்தம்**

இம்மூன்று தீர்தத்தங்களும்திருக் கோவில் இரண்டாம் பிரகாரத்தில் அமைந் துள்ள கருவூலத்தில் மேற்கு பக்கம் உள்ள சூரியன், சந்திரன் தீர்த்தத்திற்கு எதிரில் அமைந் துள்ளது. இவைகளில் நீராடுவதனால் பிணி, மூப்பு, சாக்காடு ஆகியவைகளும் அஞ்ஞானமும் நீங்கி முக்தி அடையலாம்.

**19. சாத்யாம்ருத தீர்த்தம்**

திருக்கோவில் அம்பாள் சன்னதியின் மூலஸ்தான நுழைவாயிலின் அருகே உள்ள அஷ்டலட்சுமி சன்னதியின் தெற்கு பக்கம் உள்ளது. இதில் நீரா டினால் கோபம் பிராம்மணசாபம் நிவர்த் தியாவதுடன், சூரியமூர்த்தி, மோட்ச பிராப்தி ஆகியவை கிடைக்கும்.

**20. சிவ தீர்த்தம்**

இந்த தீர்த்தம் சுவாமி சன்னதி நுழைவாயில் மற்றும் அம்மன் சன்னதி நுழைவாயில் ஆகியவற்றுக்கு இடை யே நந்தி தேவருக்கு தென்புறம் அமைந் துள்ளது. இதில் ஸ்நானம் செய்தால் சகல சௌபாக்கியமும் கிடைக்கும்.

**21. சர்வ தீர்த்தம்**

இந்த தீர்த்தம் முதல் பிரகாரத்தில் இராமநாதசுவாமி சன்னதி முன் உள்ளது. இதில் நீராடினால் பிறவிக்குருடு, நோயம் நரை திரையும் நீங்கி வளமடையலாம். கோவி லுக்கு வெளியே பல தீர்த்தங்கள். இவை புயலாலும், ஆக்கிரமிப்பாலும் பாதிக்கப்பட்டதால் இதில் நீராடஇயலாது.

**22. கோடி தீர்த்தம்**

இந்த தீர்த்தமானது, இராமர் லிங்கப் பிரதிஸ்டை செய்தபோது, அபிஷேகத்திற்கு நீர் தேவைப்பட்டது. அதனால் ராமர், தன் அம்பின் நுனியைப் பூமியில் வைத்து அழுத்தினதால் அந்த இடத்தில் பூமியைப் பிளந்து கொண்டு நீர் வந்தது. அதுவே கோடி தீர்த்தம் எனப்படுகிறது.

இந்நீரானது இராமநாதசுவாமி மற்றும் எல்லா சுவாமி அம்பாள் ஆகியவர்கள் அபிஷேகத்திற்கு பயன்படுத்தப் படுகிறது. பக்தர்களுக்கு தீர்த்தத்தை பாட்டில்களில் சேமித்து விற்கிறார்கள்.

சிவனாரின் அருளையும் ஸ்ரீராமரின் அருளையும் பெற்றுப் பெருவாழ்வு வாழவைக்கும் மகா தீர்த்தம் இது. இந்த 22 தீர்த்தங்களையும் தவிர, கடலிலேயே கலந்திருக்கிறது அக்னி தீர்த்தம். இதில் நீராடிவிட்டே ஆலய தரிசனத்துக்குச் செல்கி றார்கள் பக்தர்கள். தற்போது இந்தியாவில் உள்ள பலமாநி லங்களில் இருந்து நேரடி ரயில் வசதி ராமேசுவரம் வரை உள்ளது.

# உலகிலேயே முதலில் தோன்றிய சிவாலயம்



உலகிலேயே முதன் முதலில் தோன்றிய கோவில் என போற்றி புகழப்படும் சிவபெருமான் வீற்றிருக்கும் புனித தலங்களில் ஒன்றான உத்திரகோசமங்கை.

ஆண்டவனின் அடி முடி எப்படி அறிய முடியாததோ அப்படித்தான் இந்தக் கோவிலின் பெருமையும்,சிறப்பும். திருவாரூரில் பிறந்தால் முக்தி, காசியில் இறந்தால் முக்தி. அண்ணாமலையை நினைத்தால் முக்தி என் பார்கள். இங்கே உத்தர கோச மங்கை மண்ணை மிதி த்தாலே முக்தி.

ஆர் அறிவார்
எங்கள் அண்ணல் பெருமையை
ஆர் அறிவார் இவர் அகலமும் நீளமும்
பேர் அறியாத பெருஞ் சுடர் ஒன்று அதன்
வேர் அறியாமல் விளம்புகின்றேனே

இதுவே உலகிலேயே முதன் முதலில் தோன்றிய சிவன் கோவில் என நம்பப்படுகிறது.

ஆதி காலத்தில் அதுவும் நவக்கிரகங்கள் அறியப் படாதகாலத்தில் இருந்த சூரியன், சந்திரன், செவ்வாய் மட்டுமே இங்கு கிரகங்களாக உள்ளது, இதிலிருந்தே இந்த ஆலயம் மிக மிகப் பழமையானது என்பதை அறியலாம்.



சிவபெருமான் பார்வதிதேவிக்கு வேதாக மங்களின் ரகசியங்களை உபதேசம் செய்த இடம் இதுவாகும்.

உத்திரன் (ருத்திரன்) + கோசம் + மங்கை. மங்கைக்கு உத்திரன்உபதேசம் செய்த இடம்,ஆதலால் உத்திரகோச மங்கை என்றானது. இத்தல மூலவர் 'மங்களநாதர்' சுயம்புவாக, இலந் தை மரத்தடியில் தோன்றியவர்.

இங்கு மூன்று மூர்த் தங்கள் மங்க ளேச்சுவரர், மங்களே சுவரி, ஆடல்வல்லான், மூர்த்தி யும் இங்கே (நடராசர்) மரகதப் பச்சை, தீர்த்தமும் இங்கே பச்சை, விருட்சமும் இங்கே பச்சை. என்ன ஒரு ஒற்றுமை பாருங்கள். கோவிலின் தொன்மை நம்மை வியக்க வைக்கிறது.

மகா பாரதப் போர் 5100 ஆண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்தது. (கிமு 3100) அப்போதுதான் பரீஷீத்து மகாராசன் காலத்தில் கலிகாலம் பிறந்தது. அந்தக் காலத்தில் இந்தக் கோவில் இருந்திருக்கிறது.

அதற்கும் முந்தியது இராமாயணக் காலம் இலங்கேசுவரன் இராவணன் இங்கே வந்து வணங்கிச் சென்றிருக்கிறான். இங்குள்ள மங்களேச்சுவரர் மண்டோதரிக்கு அருளியவர். உலகிலேயே மிகச்சிறந்த சிவ பக்தனைத்தான் திரு மணம் முடிப்பேன் என்று காத்திருந்தாள் மண்டோதரி. இதனால் அவளுக்கு நீண்ட நாட்களாக திருமணம் ஆகாமல் இருந்தது. பின்பு இத்தல ஈசனையும், அம்பாளையும் மண்டோதரி வழிபட் டாள்.

அதன்பிறகே ராவணனை கரம் பிடித்தாள்மேலும் ராவணன் – மண்டோதரி திருமணம் இத்தலத்தி லேயே நடை பெற் றது என்று கூறப் படுகிறது.

– ஸ்ரீவர்ஷனி







# 11 தலைகளுடன் காட்சிதரும் குண்டுக்கரை சுவாமிநாத சுவாமி

ராமநாதபுரம் மாவட்டத்தில் குண்டுக்கரை எனும் ஊரின் அருகில் அமைந்துள்ளது, சுவாமிநாத சுவாமி திருக்கோவில். சூரபத்மனை வதம் செய்வதற்கு முன்பே முருகன் இத்தலத்துக்கு வந்திருந்தார்.

அப்போது முருகனுக்கு 11 தலைகள், 22 கைகள் இருந்ததாக கூறப்படுகிறது. அதே வடிவில், விஸ்வரூபம் எடுத்த நிலையில் இத்தலத்து உற்சவர் முருகன் தரிசனம் தருகிறார். சிவனும் முருகனும் ஒன்றே. சிவனுக்குரிய ஐந்து முகமும், முருகனுக்கு உரிய ஆறுமுகமும் சேர்ந்தே இங்கு பதினோரு முகமாக இருக்கிறது என்றும், முருகனுடைய 12 கைகளும் சிவனுடைய 10 கைகளும் சேர்ந்து 22 கைகளாக இருக்கிறது என்றும் கூறுகின்றனர். இப்படி ஒரு அதிசய முருகனை நாம் வேறு எந்த தலத்திலும் காண முடியாது.



### தல வரலாறு

சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்பு, ராமநாதபுரத்தில் வாழ்ந்த பாஸ்கர சேதுபதி மன்னர் குண்டுக்கரைமுருகன் கோவிலுக்கு தினமும் வந்து வழிபாடு செய்துள்ளார். ஒருமுறை மன்னர் சுவாமி மலைக்கு சென்று தரிசனம் முடித்துவிட்டு திரும்பினார்.

அப்போது, அவரது கனவில்சுவாமி மலை முருகன் தோன்றி, ''குண்டுக்கரை முருகன் கோவிலில் உள்ள பழைய முருகன் சிலையை எடுத்துவிட்டு, புதிதாக முருகனை பிரதிஷ்டை செய்து வழிபட்டு வந்தால் உனக்கும், உனது மக்களுக்கும் நன்மை உண்டாகும்'' எனக் கூறி மறைந்தார்.

இதையடுத்து, ராமநாதபுரம் வந்த பாஸ்கர சேதுபதியும் கனவில் முருகன் கூறியபடி, குண்டுக்கரை சென்று அந்த கோவிலில் இருந்த பழைய முருகன் சிலையை அகற்றி விட்டு, புதிதாக முருகன் சிலையை பிரதிஷ்டை செய்தார். சுவாமிமலை முருகனின் பெயரான சுவாமிநாதன் என்பதையே இத்தலத்து முருகனுக்கும் சூட்டினார்.

ஆலயத்தின் முன்பு ராஜகோபுரம் அழகுற காட்சியளிக்கிறது. ஆலயம் நுழைவு பகுதியில் நந்தியும், வேல், மயில், பாம்புடன் கொடிமரம் ஆகியவை பக்தர்களைக் கவரும் அம்சமாகக் காணப்படுகின்றன.

ஜெயதுர்கா தேவி அம்மன், தட்சிணாமூர்த்தி சுவாமிகள், விநாயகர், பால முருகன், நவக்கிரகங்கள், பாம்பன் சுவாமிகள், அருணகிரிநாதர், வீரபாகு ஆகியோரும் அருள்பாலிக்கின்றனர். இத்தலத்து விநாயகர் 12 கரங்களுடன் மடியில் சித்தி புத்தியுடன் காட்சியளிக்கிறார்.

சுவாமிமலை ஞானம் வழங்கும் ஆலயம். அங்கு தந்தைக்கு மகன் சுவாமியாய் நின்று போதித்த காட்சி இடம் பெற்றுள்ளது. மன்னருக்கு சொன்னபடி, முருகப்பெருமான் அந்த ஞானமூர்த்தியாகவே இங்கும் எழுந்தருளியிருக்கின்றார். ஆனால், மற்ற ஆலயங்களில் முருகப்பெருமான்சிவன் மடியில் அமர்ந்து, தந்தைக்கு போதிப்பது போன்ற சிலை அமைந்திருக்கும்.

ஆனால் இந்த தலத்தில் அந்த காட்சிக்கு மாற்றாக தகப்பன் சுவாமியான முருகப்பெருமான் ஒரு குன்றின் மேல் அமர்ந்து, தனது தந்தை சிவ பெருமானுக்கு பிரணவ மந்திரத்தின் பொருளுக்கு விளக்கம் அளிக்க, அதை சிவபெருமான் கீழே நின்று கேட்கும் நிலையில் அமைந்துள்ளது இத்தலத்தின் தனிச் சிறப்பு ஆகும். இத்தலத்தில் பாம்பன் சுவாமிகள் உள்ளிட்ட பலர் வழிபட்டிருக்கின்றனர்.

இந்த ஆலயத்தில் அஷ்ட கஜபுஜ மகாலட்சுமியாக காட்சியளிக்கும் 7 அடி உயரமுள்ள துர்க்கை 18 திருக்கரங்களைக் கொண்டு பிரமாண்டமான வடிவத்தில் அருள்பாலிக்கிறார். இந்த அன்னைக்கு நவராத்திரியின் ஒன்பது நாட்களிலும் சிறப்பு அபிஷேகம் மற்றும் வழிபாடுகள் நடத்தப்படுகிறது. தைப் பொங்கல் தினத்தன்று, துர்க்கா தேவிக்கு 'சாகம்பரி' என்று அழைக்கப்படும் அலங்காரம் செய்யப்படுகிறது. அன்றைய தினம் அம்மன், காய்கறிகள் மற்றும் பழங்களால் அலங்கரிக்கப்படுகிறார். சித்திரை முதல் தேதி அன்று இந்த துர்க்கை அம்மனுக்கு பூச்சொரிதல் விழா சிறப்பாக நடைபெறும்.



திருச்செந்தூருக்குப் பிறகு, சூரசம்ஹாரத்தின் பிரமாண்ட கொண்டாட்டத்திற்கு இந்தக் கோவில்தான் பெயர் பெற்றது. மூலவர் சுவாமிநாத சுவாமிக்கு ஐப்பசி கந்த சஷ்டியன்று சந்தன காப்பு அலங்காரம் செய்யப்பட்டு, பார்ப்போரை பரவசம் அடையச் செய்யும். இங்குள்ள முருகப்பெருமானை வழிபடும் பக்தர்கள் கல்வியில் சிறந்து விளங்குவார்கள் என்று நம்பப்படுகிறது.

முருகனுக்கு அபிஷேகம் செய்தல், ஆடைகளை வழங்குதல் மற்றும் உண்டியலில் காணிக்கை செலுத்துதல் மூலம் பக்தர்கள் தங்கள் நேர்த்திக் கடனை நிறைவேற்றுகிறார்கள். மனக்குழப்பம் உள்ளவர்கள் இங்கு வேண்டினால் மனக்குழப்பம் நீங்கும், மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிந்தை தெளிவடையும் என்கிறார்கள் முருகப்பெருமானிடம்வேண்டியது நிறைவேறிய பின், பால் குடம், காவடி எடுத்தல், அலகு குத்துதல், முடி காணிக்கை அளித்தல் உள்ளிட்டவற்றை செய்வதும் வழக்கமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

கோவில், காலை 6 முதல் 10 மணி வரையும், மாலை 5.30 முதல் இரவு 8.30 மணி வரையும் பக்தர்களின் தரிசனத்துக்காக திறந்திருக்கும்.




# உத்திரகோசமங்கை வராகியின் மகத்துவமும் தீராத நோய் தீர்க்கும் மஞ்சள் பிரசாதமும்



திருஉத்திரகோசமங்கைஎன்னும் திருத்தலம் மண் தோன்றியதோ மங்கை தோன்றியதோ என்னும் வாசகம் இதனை நமக்கு உணர்த்தும் அந்த சிவாலயம் மிகப்பழமை யான சிவாலயமாக இன்றளவும் இரண்டு இராஜ கோபுரங் களைக் கொண்டு விளங்கி வருகின்றது.

அந்த ஆலயத்தின் மிகப்பிர தான தெய்வமாக விளங்குபவர் ஆடல்வல்லான் ஸ்ரீ நடராஜசுவாமி அவர் அவரது திருமேனிமரகதத்தால் ஆனது வருடத் திற்கு ஒருமுறை திருவாதிரை அன்று மட்டும் அபிஷேகம் காணும் அவர் மற்ற நாட்களில் எல்லாம் சந்தனத்தால் அதாவது சந்தன காப்புடனேயே காட்சிதருவார்.

இத்தனை சிறப்புகளைக் கொண்ட அதே உத்திரகோசமங்கை யில்தான் பஞ்சமி திதி தேவதையாக விளங்கும் ஸ்ரீ வாராகி அம் மன் சுயம்புவாக தோன்றி அருள் புரிந்து வரு கின்றார்.

அந்த ஆலயத்தின் மற்றொரு தெய்வம் ஸ்ரீ மங்கை மாகாளியம்மன் ஆவார்.

சுற்றுப்புற கிராமங்கள் வரண்டு இருந் தாலும் கூட இந்த ஆலயத் தின் எதிர்ப்புறம் இருக்கக் கூடிய மிகப்பெரிய குளமானது ஒரு காலத்திலும் வறண்டு போனது கிடையாதாம்.

அந்த குளக்கரையின் மகுடமாக திகழ்கின்றது ஸ்ரீ சுயம்பு வாராகி அம்மன் திருத்தலம்.

அன்னையின் வடிவம் சுயம்பு வாக உள்ளதால் பெரும் பாலான நாட்கள் அன்னை வெள்ளி கவசம் சாத்தப்பட்டு விளங்குகிறாள் விசேஷ காலங்களில் மஞ்சள் சந்தனம் காப்பு ஏற்றுக் கொள்கி றாள் அன்னை வாராகி.

மிகப்பெரிய வடிவமாகஅமர்ந்த நிலையில் ஒரு காலை மடித்து மற்றொரு காலை பூமியில் ஊன்றிய வாறு சுயம்பு திருமேனியாக விளங்குகிறாள் வாராகி அம்மன்

வாராஹி அம்மன் ஆலயங்களில் தமிழ்நாட்டில் மிகப் பழமையான ஆலயங்களாக கருதப்படும்.

தஞ்சை வாராகி, அறச்சாலை அம்மன் என்று கூறப்படும் பள்ளூர் வாராகி, அகிலாண்டேஸ்வரி என்னும் வாராகி சக்தி, பின்னர் இந்த உத்திர கோசமங்கை வராகி மிக பிரபலமான இடத்தைப் பெறு கின்றனர்.

இந்த வராகி ஆலயத்தில் மஞ் சளுக்குத் தனிப்பட்ட விசேஷம் உள்ளது. மஞ்சள் வழிபாடு மிகப் பிரபலமாக விளங்குகின்றது.

தீராத நோய் உள்ளவர்கள் இந்த வராகி ஆலயத்திற்கு வந்து தங்களது நோய் தீரவேண் டும் என்ற வேண்டுதலை வைத்து, மஞ் சள் கிழங்கை அம்மியில் அரைத்து அம்பாளுக்கு காணிக்கையாக செலுத்துகின்றனர்.

அதுவும் இந்த ஆலயத்தின் எதிரே இருக்கக்கூடிய வற்றாத குளத்தின் நீரைக் கொண்டுதான் மஞ்சளை அரைக்க வேண்டும்.

அந்த மஞ்சள் பிரசாதத்தை அம்பிகைக்கு சார்த்தி ஏற்கனவே அம்பிகைக்கு சார்த்தப்பட்டமஞ்சள் பிரசாதத்தை ஏற்றுக் கொண்டு ஆலயத்திலேயே மருந்து உண் பதைப் போன்று உட்கொள்ள வேண்டும், அவ்வாறு மஞ்சள் பிர சாதத்தை உட்கொள்பவர்களின் தீராத நோய்கள் கூட எளிதாக நீங்கும் என்பது நம்பிக்கை.

பஞ்சமி மற்றும் ஆஷாட நவராத்திரி நவராத்திரி காலம் மற்றும் ஒவ்வொரு வெள்ளி செவ் வாய் ஞாயிறு ராகு காலம் ஆகிய காலங்களில் கோவிலில் கூட்டம் அலை மோதுகின்றது.

அதுமட்டுமின்றி வாராகி தனி கருவறையில் தனிக் கோவில் கொண்டு விளங்குவது இத்தலத்தில் சிறப்பம்சமாக உள்ளது.

மேலும் ஆடி மாதம், அமா வாசை, பௌர்ணமி போன்றநாட்களில் பொங்கல் வைத்து வழிபாடும் நடை பெறுகிறது. மஞ்சள் அரைப்பதற்கு வசதியாக தரை மற்றும் திண்டு அமைத்து அதன் மேல் நிறைய அம்மி கற்கள் பதிக்கப்பட்டுள்ளது.

நோயால் அவதிப்படுபவர்கள் அவசியம் இந்த வராகியை சந்தித்து புனர்வாழ்வு வாழலாம்.





# இராமேஸ்வரம் தரிசனத்தில் முழு பலனைத் தரும்

## ✦ நீலேஸ்வரர் லிங்கம் ✦ உப்பு லிங்கம் ✦ சேது மாதவர் ✦ பாதாள பைரவர்

இராமேஸ்வரம் கோவிலில் எவருக்குமே தெரி யாத சில அற்புத சக்தி வாய்ந்த சன்னிதிகள் உள்ளது. ராமேஸ்வரத்தில் பிரகாரங்களில் சுற்றி வரும்போது நிறைய லிங்கங்கள் இருப்பதை பார்த்திருப்பீர்கள்.

இவற்றில் சில லிங்கங்கள் கோவில் நிர்வாகத் தாலும், பக்தர்களாலும் கவனிக்கபடாமல், பூஜை கள் நடைபெறா மலும் இருப்பதையும் பார்த் திருப்பீர்கள். அப்படி ஒரு லிங்கம் பல நூறு வருடங்கள் பராமரிப்பு இல் லாமல் தூசி பிடிக்கப்பட்டு, பரா மரிப்பு இல்லாமல் உள்ளது.

மூன்றாம் பிரகாரத்தில் நளன், நீலன், கவன் ஆகியோரால் பூஜிக்கப்பட்ட சிவன் சன்னதி களுக்கு அருகில் உள்ள இந்த லிங்கத்தின் பெயர் நீலேஸ்வரர் லிங்கம்.

இந்த நீலேஸ்வரர் லிங்கத்தின் சிறப்பு என்ன வென்றால் பல நூறு வருடங்களுக்கு முன்பு சீதையால் பிரதிஷ்டை செய்யபட்ட தற்போதுள்ள ராமநாதர் லிங்கத்திற்கு பதிலாக இருந்த மூலவர் லிங்கம் இவர்தான் என கூறப்படுகிறதுஇந்த லிங்கத்தை தரிசிப்பதற்குரிய பிராப்தம் இருந்தால் தரிசிக்க முடியும்.

மேலும் ராமேஸ்வரம் கோவிலில் ராமநாதர் சன்னிதிக்கு பின்புறம் உப்புக்கல்லால் செய்யப்பட்ட ஒரு பழமையான லிங்கம் உள்ளது. பல வருடங் களாக அந்த உப்புக்கல்லால் செய்யப்பட்ட உப்பு லிங்கம் கரையாமல் அப்படியே உப்புக் கல்லாகவே இருப்பது மிகவும் அதிசயமாகும்.

இந்த லிங்கம் வந்ததற்கு ஒரு கதை கூறப்படு கிறது. ஒரு முறை சிலர், ராமேஸ்வரம் கோவிலில் உள்ள லிங்கம் மணலால் ஆனது அல்ல என்றும், அப்படி மண லால் செய்யப்பட்டது என்றால், அபிஷேகத்தின் போது கரைந் திருக்க வேண்டும் என்றும் வாதம் செய்தார்கள்.

அந்த நேரத்தில் பாஸ்கரராயர் என்றஅம்பாள் பக்தர், தண்ணீரில் எளிதில் கரையும் தன்மையுடைய



உப்பில் ஒரு லிங்கம் செய்து, அதற்கு அபிஷேகம் செய்தார். ஆனால் அந்த லிங்கம் கரையவில்லை. அம்பாளை வணங்கும் தன்னால் பிரதிஷ்டை செய்யபட்ட லிங்கமே கரையாதபோது, காக்கும் கடவுளின் மனைவியான சீதாதேவி பிரதிஷ்டை செய்த லிங்கம் கரையாமல் இருப்பதில் என்ன அதிசயம் இருக்கிறது’ என்று கூறினார்.

அவர் செய்த உப்பு லிங்கத்தை இப்போதும் நாம் தரிசனம் செய்யலாம். மேலும் இராமேஸ்வரம் கோவிலுக்கு செல்பவர்கள் அவசியம் சேதுமாதவர் சன்னதியின் மகத் துவத்தை தெரிந்து செல்வது நன்மை தரும்.

காலில்சங்கிலியுடன் காட்சிதரும் பெருமாள் தான் சேது மாதவர், சுந்தரபாண்டியன் என்னும் மன்னன், பெருமாளின் தீவிர பக்தராக விளங்கினான். அவனது குழந்தை பாக்கியம் இல்லா குறையைத் தீர்க்க மகாலட்சுமியையே அவரது மகளாக அவதரிக்கும்படி செய்தார் பெருமாள். அவள் மணப்பருவம் அடைந்தபோது, பெருமாள் ஒரு இளைஞனின் வடிவில் வந்து அவளிடம் வம்பிழுத்தார். மன்னன் அந்த இளைஞனை சிறையில் அடைத்து, சங்கிலியால் காலைக் கட்டிப்போட்டான்.

பக்தனின் பக்திக்கு கட்டுப்பட்ட பெருமாள், அவ்வாறு சங்கிலியால் கட்டுவதற்கு இடமளித்தார்.

அன்றிரவில் மன்னனின் கனவில் இளைஞ னாக வந்து சிறையில் அடைபட்டிருப்பது தானே என்று மன்னனுக்கு உணர்த்தவே, இருவருக்கும் திருமணம் செய்விக்கப்பட்டது. இளைஞராக வந்த சுவாமி, இங்கு சேதுமாதவராக அருளுகிறார். அவரது காலில் சங்கிலி கட்டப்பட்டிருக்கிறது.

இவரது சன்னதி அருகில் லட்சுமி நாராயணர், யோக நரசிம்மர் இருவரும் அருகருகில் காட்சி தருகின்றனர். கடுமையான பிதுர்தோஷம் உள்ளவர்கள் இராமேஸ்வரம் கோவிலில் உள்ள அனைத்து தீர்த்தத்திலும் நீராடிவிட்டு இந்த சேதுமாதவர் சன்னதி முன்பு, கடல் மணலில் லிங்கம் பிடித்து வைத்து தங்கள் கோரிக்கைகளைச் சொல்லி வணங்கினால் மட்டுமே கடுமையான பிதுர்தோஷத்தை நீங்கும் என்பது எவருக்குமே தெரியாத தேவரகசியமாகும்.

ராமர் இங்கு சிவபூஜை செய்தபோது அவரைப் பிடித்த பிரம்மஹத்தி தோஷம் (கொலை செய்த பாவம்) விலகியது. அந்த தோஷம் எங்கு செல்வதென தெரியாமல் திணறியது. அதனால் வேறு யாருக்கும் பாதிப்பு உண்டாகாமல் இருக்க, சிவன் பைரவரை அனுப்பினார். அவர் பிரம்மஹத்தி தோஷத்தை தன் திருவடியால் அழுத்தி, பாதாளத்தில் தள்ளினார். பின்னர் இத்தலத்திலேயே அமர்ந்து, இங்கு வரும் மனம் திருந்திய பக்தர்களின் கொடிய பாவங் களைப் பாதாளத்துக்குள் தள்ளுபவராக அருள் செய்கிறார். இவருக்கு “பாதாள பைரவர்’ என்று பெயர். இவர் கோடிதீர்த்தம் அருகில் உள்ளது.

இராமேஸ்வரம் கோவிலுக்கு செல்பவரகள் பல நூறு வருடங்கள் பழமையான நீலேஸ்வரர் லிங்கம்., உப்புக்கல்லால் செய்யப்பட்ட உப்பு லிங்கம், சேது மாதவர் சன்னிதி மற்றும் பாதாள பைரவர் ஆகிய சன்னிதிகளுக்கு சென்று தரிசித்து முழு பயன்பெறுங்கள் தெரியாதவர்களுக்கு தெரியபடுத்துங்கள்.



உங்கள் பகுதியில் உள்ள கோவில் கும்பாபிஷேகம், சிறப்பு விழாக்கள், போன்றவற்றை
இதுபோன்ற சிறப்பு மலராக வெளியிட தொடர்பு கொள்ளவும்
தரமாகவும், சிறப்பாகவும் செய்து தருகிறோம்...!
தொடர்ப்பு கொள்ளவும்
அழகுராஜா
முதன்மை செய்தியாளர்
செல்: 9994323622
9444228203




# தீபாவளி திருநாளில் நடைபெறும் லெட்சுமி குபேர யாகம் மகாபஞ்சமுக ப்ரத்யங்கிரா தேவி கோவிலில் நடைபெறுகிறது

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே உள்ள வேதியரேந்தல் விலக்கில் பஞ்சபூதேஸ்வரம் என்னும் இடத்தில் உள்ளது, ஸ்ரீ மகா பஞ் சமுக ப்ரத்யங்கிரா தேவி திருக்கோவில்.

இது முழுவதும் கருங்கல்லால் அமைக் கப்பட்டது. இந்த கோவில் கோபுரம் தமிழகசிற்ப கலைக்கு சிறந்த எடுத்துக்காட்டு ஆகும். இக் கோவில் வளாகத்தில் பஞ்சமுக ப்ரத்யங்கிரா தேவி கோவில் நிறுவனர் தவத்திரு ஞானசேகர் சுவாமிஜி ஜீவசமாதி பீடம் அருகில்உள்ளது. ஏராளமான பக்தர்கள் சுவாமி ஜி பீடத்தில் மனமுருகி வழிபாடு செய்து செல்கின்றனர்.

இந்த கோவிலில் ஒவ்வொரு மாதம் அமாவாசை தினத்தில் உலக மக்கள் நல மாக வாழவேண்டி ப்ரத்யங்கிரா யாகமும், பவுர்ணமி தோறும் திரு விளக்கு பூஜையும் நடைபெறும். கோவிலில் மற்றொரு சிறப்பம்சமான 24 மணி நேரமும் நடை பெறும் அன்னதானத்தில் கலந்து கொள்ள பக்தர்கள் இரவு, பகலாக குவிகின்றனர். வரும் தீபாவளி திருநாள்

20ந்தேதி திங்கட்கிழமை மாலை அமாவாசை முன்னிட்டு அன்புடன் உலக மக்கள் ஆனந்தமாக வாழ





வேண்டியும் பதினாறு வகையான செல் வங்கள் கிடைக்க வேண்டி ஸ்ரீ லட்சுமி குபேர பூஜை யாகம் வழிபாடு நடைபெறுகிறது.

தினமும் காலை அன்னதானத்தில் வெண் பொங்கல் அல்லது உப்புமா, கேசரி, வடை வழங்கப்படுகிறது. மதியம் 2 வகை காய்கறிகளுடன் சாம்பார், ரசம், மோர் உடன் நடந்து வருகிறது. சித்திரை தமிழ் வருட பிறப்பு, ஆடியில் சத சண்டி யாக பெரு விழாவில் மூன்று வேலையுமே சிறப்பு அன்ன விருந்து நவ ராத்திரி, தீபாவளி பண்டிகை பண்டிகையில் அறு சுவை விருந்தும் தை பொங்கலுக்கு பக்தர்களுக்கு கரும்பும் வழங்கப்பட்டு வருகிறது. பக்தர்கள் பசியோடு இருக்ககூடாது. என்பதற்காக எப்போதும் அன்னதானம் நடைபெற்று வருகிறது. இதற்காக அன்னதான குழு ஏதும் கிடையாது. பக்தர்களே இங்கு நடைபெறும் அன்ன தானங்களில் பங்கேற்று செல்லும் போது அன்னதானம் சப்ளை செய்யும் சேவையும் செய்கிற காட்சியை இங்கு காணலாம்.

இது பற்றி ஸாக்த மடாலயம் நிறுவனர் தவதிரு ஞானசேகர சுவாமிகள் கூறி உள்ளதாவது தானத்தில் சிறந்தது அன்னதானம் ஆகும். வெளியூர்களில் இருந்து வருபவர்கள் பசியோடு சாமி கும்பிடக் கூடாது. பசியாறி சாமி கும்பிடும் போது வயிறு நிறைந்து மன நிறைவோடும் சாமி கும்பிட்டு செல்வார்கள். ஆகையால் இங்கு எறியும் அடுப்பு அனணக்கபடுவதில்லை மக்கள் எந்த நேரத்திலும் பசியாறி செல்லலாம்.

ஆலயத் தொடர்புக்கு: ஸ்ரீ மஹா பஞ் சமுக ப்ரத்யங்கரா வேத தர்ம ஷேத்ரா டிரஸ்ட், மானாமதுரை, சிவகங்கை மாவட்டம், செல்: 98428 58236



## வாழ வழியின்றி தவிப்பவர்களுக்கு நல்வழிகாட்டும்

# வழிவிடும் முருகன்

இராமநாதபுரம் அருள்மிகு ஸ்ரீ வழிவிடுமுருகன் திருக்கோவில் சொத்துக்காக சண்டையிட்டு, கோர்ட் படியேறும் சகோதரர்கள் இங்குவந்து வழிபட்டால் சமாதானமாக போகவும், இருவரும் வாழவும் வழி பிறக்கிறது.

பொதுவாக கோயில்களில் நுழைந்தவுடன் இடதுபுறம் விநாயகரும், வலதுபுறம் முருகனும் இருப்பார்கள். விநாயகரை முதலில் வணங்கி விட்டு கோயிலுக்குள் சென்று திரும்பி வரும் போது முருகனை வணங்குவது போன்ற அமைப்பு இருக்கும். ஆனால், இங்கே கர்ப்பகிரகத்தில் முருகனும் விநாயகரும் சேர்ந்து அருள்பாலிப்பது மிக மிக சிறப்பு. இத்தகைய படைப்பை மிக அரிதாகவே காண இயலும்.



பாவம் போக்கும் சாயா மரம்: கோயிலின் உள்ளே 'சாயா' என அழைக்கப்படும் மரம் ஒன்று உள்ளது. சனிபகவானின் தாயார் பெயர் சாயா இந்த மரத்தை சாயாதேவியின் அம்சமாக இப்பகுதி மக்கள் பூஜை செய்கிறார்கள். எனவே இத்தலத்திற்கு வந்து வழிபடுவோரை தனது தாயின் சொல்லுக்கு கட்டுப்பட்டு, சனி பகவான் தங்களது துன்பங்களை குறைப்பதாக ஐதீகம். இந்த மரம் இலங்கையிலுள்ள கதிர்காமம் முருகன் கோயிலிலும் உள்ளது.

தல வரலாறு: தற்போது கோயில் உள்ள இடத்தில் பல ஆண்டுகளுக்கு முன் அரசமரம் இருந்தது. மரத்தின் கீழ் ஒரு சிறிய வேல் நடப்பட்டு அதற்கு பூஜை செய்யப்பட்டு வந்தது. அருகிலேயே கோர்ட் இருந்ததால் விசாரணைக்காக வருபவர்கள், வழக்குகளில் வெற்றி பெற வேண்டும் என வேண்டிச் செல்வார்கள்.

சொத்து வழக்குகளில் சிக்கி, வாழ வழியற்று நிற்பவர்கள், கிரிமினல் வழக்குகளில் சிக்கிய நிரபராதிகள் எல்லாம் இத்த முருகனை வணங்கி வாழ வழிபெற்றனர். எனவே வழிவிடும் முருகன் என்ற பெயர் இவருக்கு ஏற்பட்டது. இவரை வந்து வழிபட்டு செல்லும் பக்தர்களுக்கு ஒரு சிறந்த வழிகாட்டியாகவும் வாழ்க்கை முழுவதும் துணை வருவதாகவும் நம்பிக்கை உள்ளது.

அதிசயத்தின் அடிப்படையில்: இத்தலத்தில் கர்ப்பகிரகத்தில் முருகனும் விநாயகரும் சேர்ந்து அருள்பாலிப்பது மிக மிக சிறப்பு.

இத்தகைய படைப்பை மிக அரிதாகவே காண இயலும் இத்தலத்தில் தான் சனீஸ்வரனின் தாய் சாயாதேவி மரம் வடிவில் அருள்பாலிக்கிறாள். இந்த மரத்துக்கும் சாயாமரம் என்ற பெயருண்டு.






# தீபாவளி: சகோதரி வீட்டில் சாப்பிட்டால் நரக பயம் தீரும்

தீபாவளி பண்டிகை 5 நாட்கள் (ஒரு வாரம்) கொண்டாடப்பட வேண்டும் என சாஸ்திரம் சொல்கிறது. எவ்வாறு கொண்டாட வேண்டும் என்றும் அதன் விசேஷங்கள் விவரங்களை இந்த பதிவில் பார்ப்போம் வாருங்கள்.

பொதுவாக "தீபாவளி" எனும் வட மொழி சொல்லுக்கு #தீப_ஆவளி என்று பொருள் ஆவளி என்றால் வரிசை என்று பொருள். ஆக தீபங்களை வரிசையில் வைப்பது தீப ஆவளி என்பது தீபாவளி.. ஆகியது.

1. கோவத்ஸ துவாதசி என்று பெயர். வத்சலா என்றால் குழந்தை என்று பொருள். பொதுவாக எந்த ஒரு பெரிய அளவிலான பண்டிகை கொண்டாட வேண்டும் என்றாலும் முதலில் கோ பூஜை செய்ய வேண்டும். தீபாவளி பண்டிகை என்பது நரகாசுரன் எனும் தன் மகனை பூமா தேவியின் அம்சமான சத்யபாமா ஸ்ரீ கிருஷ்ணர் முன்னிலையில் சம்ஹாரம் செய்த தினமாகும்.

எனவே கன்றுடன் கூடிய பசுவை இன்று வழிபடுவதால் நம் குழந்தைகள் சொல்படி கேட்டு நடக்கும் நல்ல பிள்ளைகளாக வளருவார்கள். இன்று ஒரு நாளாவது பசும்பால், தயிர் உண வில் தவிர்க்க வேண்டும். பால் முழு வதும் அல்லது போதுமான அளவு கன்றுக்குட்டி குடிக்க செய்ய வேண்டும். இதன் மூலம் நம் குழந்தைகள் நல்ல வழியிலும் சொல் பேச்சு கேட்டும் நல்லவர்களாகவும் வளருவார்கள்.

2. கடந்த ஒரு மாதம் முன்பு மஹாளய பக்ஷ காலம் இருந்திருக்கும். அப்போது எம லோகத்திலிருந்து வந் திருந்த நம் முன்னோர் நினைவாக நாம் தர்ப்பணம் செய்திருப்போம். அவர்கள் மீண்டும் யம லோகம் செல்ல அவர்களுக்கு செல்லும் பாதையில் வெளிச்சம் காட்ட தென்திசை நோக்கி வீட்டிற்கு வெளியே, வாசலில் வீட்டில் உள்ள உறுப்பினர்கள் ஒருவருக்கு ஒரு தீபம் வீதம் அல்லது குறைந்தது 5 தீபம் மாலை நேரத்தில் தெற்கு நோக்கி வீட்டிற்கு வெளியே வாசலில் வைக்க வேண்டும்.

3. தன்வந்திரிஜெயந்தி மருத்துவ கடவுளான தன்வந்திரி பகவானை வழிபட நெடிய நோய்கள் குணமாகும். ஆரோக்கியம் மேம்படும். மேலும் ஐப்பசி மாதம் வருகிற திரயோதசி தனதிரயோதசி என்பர். அன்று பண்டி கைக்கான பொன் ஆபரணங்கள் புதிய துணிமணிகள் வாங்கி கொள்ள சிறந்த நாள். பொதுவாக அக்ஷய திருதியை விட இன்று நகைகள் வாங்குவது உத்தமம்.

வெந்நீரில் எண்ணெய் தேய்த்து குளிப்பதால் கங்கையில் நீராடிய புண்ணியம் உண்டாகும். வெந்நீரில் எண்ணெயிலும், லக்ஷ்மீயும் கங்கையும் வாசம் செய்கிறார்கள் என்பது ஐதீகம்.

ஜோதிட ரீதியாக இந்த தீபாவளி பண்டிகை திதியை அடிப்படையாக கொண்டு உள்ளது. திதிக்கு சூர்ய சந்திரர்கள் மட்டுமே முக்கியம். சூரியனுக்கும் சந்திரனுக்கும் உள்ள இடைவெளி தொலைவை திதி என்கிறோம். இவ்வாறு சதுர்தசியில் குளித்து விட்டு #யம_தர்ப்பணம். செய்து விட்டு பின்னர் குடும்பத்தோடு தெய்வ பூஜைகள் செய்து பின்னர் மாலையில் தீபம் வைக்க வேண்டும்.

மத்தாப்பு போன்ற வெளிச்சம் தரும் வெடிகளை சந்தோஷமாக வைக்க வேண்டும்.

4. தீபாவளி அன்று மாலையில் அமாவாசை இருக்கிறது. அன்று சூரிய



னும் சந்திரனும் சேர்ந்து சுக்கிரனின் ராசி வீடான துலாம் ராசியில் உள்ள நாள். அதனால் அன்றைய தினத்தில் மாலை நேரத்தில் #லக்ஷ்மீ_குபேர_ பூஜை செய்ய வேண்டும்.

லக்ஷ்மீ குபேர படம் அல்லது கலசம் வைத்து 21 எண்ணிக்கையில் அரளி மொட்டு, அரளி இலை, அப்பம் பக்ஷணம் வைத்து முந்தைய நாள் வாங்கிய ஆபரணங்கள் கொண்டு தன்னை நன்கு அலங்காரம் செய்து கொண்டு வீட்டில் உள்ள நகைகளை பூஜையில் வைத்து அலங்காரம் செய்து வழிபட வேண்டும்.

5. அடுத்த நாள் கேதாரகௌரி விரதம், லக்ஷ்மீ பூஜைகள் செய்ய வேண்டும், சிவனுக்கு கேதாரேஸ்வரர் என்கிற திருநாமம் உண்டு. அன்னை பார்வதி தேவி இருந்த விரதம் ஆகையால் கேதார கௌரி விரதம் என்பார்கள். இன்று வீட்டில் கலசம் வைத்து 21 முடிச்சு உள்ள மஞ்சள் சரட்டை வைத்து கலசத்துக்கு அலங்காரம் செய்து 21 எண்ணிக்கையில் பழம், வெற்றிலை பாக்கு, அப்பம் போன்றவை வைத்து பூஜிக்க வேண்டும். பின்னர் சுமங்கலி பெண்கள் தன் வலதுகையில் சரடை கட்டி கொள்ளவும், 21 சுமங்கலி பெண்களுக்கு தானம் செய்யவும். இதனால் குடும்பத்தில் எப்போதும் இடர்கள் வராது, ஒற்றுமையும் சந்தோஷமும் நிலைத்து நிற்கும்.

இன்று மாலை உல்காதனம் செய்ய வேண்டும். உல்கா என்றால் எரியும் நெருப்பு கட்டை. என அர்த்தமாகும் பொதுவாக கம்பளி ஆடைகளை ஏழை எளியோர்க்கு தானம் செய்ய வேண்டும். ஏனென்றால் துலா ராசியில் தான் சனி உச்சம் பெறு கிறது.

6. 22.10.2024 புதன்கிழமை அன்று கார்த்திக மாதம் முதல் நாள். பொதுவாக ஜோதிட ரீதியாக கால புருஷனுக்கு மறைவு ராசியான விருச்சிக மாதம் முழுவதும் தீபம் ஏற்றி வைத்து வருவது நல்லது. எந்த பாவத்தின் பலனும் அதன் ஏழாம் பாவம் குறிகாட்டும். அதன் படி விருசிகத்திற்கு 7ம் பாவத்தில் தான் கார்த்திகை நக்ஷத்திர மண்டலம் உள்ளது. அதன் உருவம் ஜோதி சுடர் வடிவம். எனவே அன்றிலிருந்து 30 நாட்கள் #அகண்ட_தீப_பூஜை என தினமும் மாலை நேரத்தில் தீபம் ஏற்றி வைக்க வேண்டும்.

இதனால் கடன் பிரச்சனைகள் தீரும். மேலும் கடந்த 34 நாட்களாக நமக்காக இருந்த பண்டிகை இன்று பசு கன்றுக் குட்டி, ஆடு போன்ற வாயில்லா ஜீவ ராசிகளுக்கும் நன்மை உண்டாக அவற்றை பூஜிக்க வேண்டும்.

நம்மை நம்பி உள்ளதாக நாம் நம்பி கொண்டிருக்கும் பசு ஆடு நாய் பூனை கோழி போன்ற பிராணிகளுக்கு இன்று உணவு அளிக்க வேண்டும். அதனை இன்று துன்புறுத்த கூடாது. நமக்கு உதவும் பசுக்களை இன்று பூஜை செய்ய வேண்டும்.

7. யம துவிதியை அன்று சகோ தரர்கள் அவர்தம் சகோதரிகள் அழைப்பை ஏற்று சகோதரிகள் இல்லம் சென்று சகோதரர்களுக்கு சகோ தரிகள் கையாலே தலை வாழை இலையில் விருந்து உணவு கொடுக்க வேண்டும். இதற்கு ஒரு புராண கதை சொல்லபடுகிறது.

அதன் படி யமனின் சகோதரியான யமுனா தன் அண்ணனான யமனை ஒரு நாள் உணவு அளிக்க பரிமாற அழைத்தார். ஆனால் யம லோகத்தில் சதா நேரமும் உயிரினங்களின் இறந்த பின்பு அதன் ஆத்மாக்கள் வந்த வண்ணம் இருந்ததால் அதனை கவனிக்கவே நேரம் சரியாக இருந்தது. இதனால் சகோதரி யமுனைவின் அழைப்பை ஏற்று வர இயலாது போனது.

இந்த சமயத்தில் ஸ்ரீ கிருஷ்ணர் மூலம் நரகாசுரனை வதம் செய்த பின்னர் யம லோகத்தில் வரும் ஆத்மா எண்ணிக்கை குறையவே யமனுக்கும் வேலை குறைந்தது.

**அப்போது தான் தன் சகோதரி யின் அழைப்பு ஞாபகம் வந்தது. உடனே யமுனையிடம் சென்று படையல் உண்டு விட்டு, இது போல் யார் ஒருவர் தன் சகோதரி கையால் இன்று உணவு உண்ணு கிறானோ அவர்க்கு நரக பயம் இல்லை என யமுனாவிற்கு வர மளித்தார்.**

இவ்வாறு இன்று சகோதரர்கள் தன் வீட்டில் உணவு உண்ணாமல் தன் சகோதரி வீட்டில் உணவு உண்டு ஒருவருக்கு ஒருவர் பரிசு பொருட்களை பரிமாறி கொண்டு சந்தோஷமாக இந்த தீபாவளி பண்டிகையை கொண்டாட வேண்டும். இவ்வாறு பண்டிகை சாஸ்திரம் அறிவியல் ஜோதிடம் என அனைத் தையும் ஒருங்கே கொண்டு உள்ளது இந்த தீபாவளிபண்டிகை.